DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
**Spl.S.C.No.13/2025**
**P.W.10**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.பி.பெரியமணி |
| Father's Name | : | திரு.பெரியசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 61 |

(Accused is absent. Petition u/s.317 Cr.P.C filed and allowed.)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 22nd day of January 2026.

**முதல் விசாரணை**

நான் காவல் துறையில் உதவி ஆய்வாளராக பணியாற்றி கடந்த 31.03.2025ம் தேதி பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 02.11.2024ம் தேதி மணப்பாறை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது சிந்துஜா தனியார் மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று மருத்துவமனைக்கு சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சீகம்பட்டியை சேர்ந்த ராஜகோபால் மகன் தமிழ்செல்வன் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று நிலைய மனு ரசீது எண்.1159/2024 என பதிவு செய்தேன். பின்னர் 04.11.2024 அன்று காலை 5.00 மணிக்கு மணப்பாறை காவல் நிலைய குற்ற எண்.532/2024, பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS and 3(1)(r), 3(1)(s), 3(2)(va) of SC/ST Act–ஆக வழக்கை பதிவு செய்து புகார் வாக்குமூலத்தையும், அசல் முதல் தகவல் அறிக்கையையும் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். ஒரு நகலை புலன்விசாரணை அதிகாரியை நியமிக்கவேண்டி திருச்சிராப்பள்ளி மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பி வேண்டுக்கோள் கடிதம் அனுப்பினேன்.

அந்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.12** ஆகும். வழக்கு சம்பந்தமாக 30.11.2024 அன்று காவல் துணை கண்காணிப்பாளர் விசாரித்தார்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

வழக்கு குறித்த விவரங்கள் முதல் தகவல் அறிக்கையில் 04.11.2024 அன்று காலை 5.00 மணிக்கு தான் தகவல் கிடைக்கப்பெற்றதாக குறிப்பிட்டிருந்தால் அது தவறானதாகும். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தபோது சம்பவம் குறித்த தகவல் 02.011.2024 அன்றே கிடைத்தாக தெரிவித்தேன் என்றால் சரிதான். 02.11.2024 அன்று நான் நிலைய பொறுப்பு அதிகாரி ஆவேன். அன்றைய தினம் மணப்பாறை அரசு மருத்துவமனையிலிருந்து தகவல் எதுவும் கிடைக்கப்பெற்றதா என்றால் தாமதமாக தகவல் வந்தது. அன்றைய தினம் நான் மட்டும் தான் சிந்துஜா தனியார் மருத்துவமனைக்கு சென்றேன். அ.சா.1 தமிழ்செல்வன் எழுத்துபூர்வமாக புகார் கொடுத்தாரா அல்லது வாய்மொழியாக வாக்குமூலம் கொடுத்தாரா என்றால் வாய்மொழியாக தான் கொடுத்தார். முதல் தகவல் அறிக்கையில் எழுத்துப்பூர்வமாக புகார் கொடுத்திருப்பதாக குறிப்பிட்டிருப்பது தவறு ஆகும். புகார் வாக்குமூலம் யாரால் எழுதப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு நினைவில்லை. அது என் கைப்பட எழுதப்படவில்லை என்றால் சரிதான். அந்த புகாரில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் புலன்கொள்ளத்தக்க வழக்கு தொடர்புடையது என்றால் சரிதான். அதுபோன்ற வழக்குகளுக்கு உடனடியாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவேண்டும் என்றால் விசாரணை செய்துவிட்டு தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படும். இந்த வழக்கில் நான் முதல் புலன்விசாரணை மேற்கொண்ட பிறகு தான் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் சாட்சிகளின் வாக்குமூலங்களை பதிவு செய்யவில்லை. நான் புலன்விசாரணை மேற்கொண்ட ஆவணங்களை தாக்கல் செய்தேனா என்றால் வாய்மொழியாக தான் விசாரணை மேற்கொண்டேன். வழக்கின் வாதி, அவரது நண்பர் மார்கண்டேயேன் ஆகியோர்களை விசாரித்தேன். அ.சா.1 தமிழ்செல்வனிடம் சிந்துஜா மருத்துவமனையில் வாக்குமூலம் வாங்கிய பிறகு நான் மருத்துவமனைக்கு போகவில்லை என்றால் சென்றேன். நான் 02.11.2024 க்கு பிறகு எத்தனை நாட்கள் அவ்வாறு மருத்துவமனைக்கு

சென்றேன் என்றால் 03.11.2024 அன்று சென்றேன். அதன்பிறகு நான் செல்லவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்ட விவரங்கள் என்னால் கைப்பட எழுதப்பட்டவை ஆகும். முதல் தகவல் அறிக்கை வரிசை எண்.14ல் அ.சா.1 தமிழ்செல்வன் கையொப்பத்தை நான் எங்கு வைத்தேன் என்று வாங்கினேன் என்றால் மருத்துவமனையில் வைத்து வாங்கினேன். சிறப்பு நீதிமன்றத்தால் விசாரிக்கத்தக்க வழக்கு என்பதால் முதல் தகவல் அறிக்கையை நான் உடனடியாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். இந்த வழக்கில் கண்ட முதல் தகவல் அறிக்கை அன்று இரவு 9.30 மணிக்கு நீதிமன்றத்திற்கு எதிரி காவல் அடைப்பு அறிக்கையுடன் தான் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். இந்த வழக்கில் கண்ட முதல் தகவல் அறிக்கை சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.